## 3.5 2007–08–ஆம் ஆண்டு முதல் நமக்கு நாமே திட்டம் மீண்டும் செயல்படுத்துதல் மற்றும் திட்டச் செயலாக்கத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.அ.தி.3) துறை

அரசாணை (நிலை) எண்.172 நாள் : 15.10.2007

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.77 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 19.4.1999
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண்.63543/2007/எஸ்.எஸ்.2, நாள் 30.8.2007

**ஆணை**

1997–98 ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தக்கூடிய நமக்கு நாமே திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2000–2001ம் ஆண்டுவரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளில் மாற்றம் ஏதும் இல்லை எனினும் 2001–02ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின் பெயர் 'கிராம தன்னிறைவுத் திட்டம்' என்று மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டது. பின்னர் 17.7.02ல் மீண்டும் இத்திட்டத்தின் பெயர் "தன்னிறைவுத் திட்டம்" என்று மாற்றப்பட்டு 2005–06 ஆம் ஆண்டுவரை செயல்படுத்தப்பட்டது. 30.7.07 மற்றும் 31.7.07 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் 'நமக்கு நாமே திட்டம்' மீண்டும் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பிற்கிணங்க, நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவது குறித்த விரிவான கருத்துருவை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநர் சமர்ப்பித்துள்ளார். மக்களின் சுய உதவி மற்றும் சுய சார்பு தன்மையை ஊக்குவிக்கவும், பலப்படுத்தவும் மக்களுக்கு தேவையான திட்டங்களை அவர்களது பங்களிப்புடன் செயல்படுத்தி பொதுச் சொத்துக்கள் உருவாக்கி பராமரித்து வருவதே நமக்கு நாமே திட்டத்தின் நோக்கமாகும். அரசு, திட்டங்களை தீட்டி அதில் மக்கள் பங்கு கொள்வதற்கு பதிலாக, மக்கள் தாமே கண்டறிந்து, செயல்படுத்தும் திட்டங்களில் அரசு பங்கு கொள்வது நமக்கு நாமே திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும். இந்த வகையில் நமக்கு நாமே திட்டம், நகரம் மற்றும் கிராமம் ஆகிய அனைத்து பகுதியிலும் செயல்படுத்தப்படும்.

2. முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க நமக்கு நாமே திட்டத்தை 2007–08 ஆண்டு முதல் செயல்படுத்துவதற்கான கருத்துருவையும் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும், அரசின் ஒப்புதலுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அனுப்பியுள்ளார். 2005–2006ம் ஆண்டில் 'தன்னிறைவுத் திட்டம்' என்ற பெயரில் இருந்த இந்த திட்டத்திற்கு ரூ.100 கோடி அரசு ஒதுக்கீடு செய்தது என்றும் அதே அடிப்படையில் 2007–08ஆம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்திற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் அரசிடம் கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. தற்போது உயர்த்தப்பட்டுள்ள மாநில அரசின் நிதி பகிர்வு மூலமாகவும், 12வது நிதி குழு மூலமாகவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவு நிதி வழங்கப்படுவதால் உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலைமையில் நல்ல முன்னேற்றம் உள்ளது. கிராமம் மற்றும் நகர அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக 'நபார்டு' வங்கி உதவி மற்றும் அரசின் செலவினம் அதிக அளவில் உயர்ந்துள்ளது. அதே போல் நகர்புற வளர்ச்சிக்கான நிதி உதவி வாய்ப்புகளும் பல்வேறு திட்டங்கள் மூலமாக அதிகரித்துள்ளது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டங்கள் மூலம் கிராமம் மற்றம் பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த பணிகள் செயல்படுத்தப்படுகிறது. எனவே அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி தேவை குறைவாகவே தேவைப்படும் என்று அரசு கருதுகிறது. ஆகவே 2007–08 ஆம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்திற்கு அரசின் பங்களிப்பு ரூ.50 கோடி போதுமானதாக இருக்கும் என்று கருதி இத்தொகையை ஒதுக்கீடு செய்யலாம் என்றும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் பரிந்துரை செய்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் அரசு முடிவு செய்துள்ளது.

4. அதன்படி 2007–08ஆம் ஆண்டு முதல் நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது. 2007–2008 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.50 கோடி (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்) அரசு அனுமதிக்கிறது. இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் இந்த ஆணையின் இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்த வழிக்காட்டு நெறிமுறைகள் உடனடியாக நடைமுறைக்கு வருகிறது என்றும் அரசு ஆணையிடுகிறது.

**5.** முன் பத்தி 4ல் இத்திட்டத்திற்காக அரசு அனுமதித்த ரூ.50கோடியில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர் ஒப்புதல் அளிக்கக்கூடிய சிறப்பு திட்டங்களுக்காக 25 விழுக்காடு தொகையை இயக்குநரகத்தில் வைத்துக் கொண்டு, மீதமுள்ள தொகையை மாவட்டங்களுக்கு, மொத்த மக்கள் தொகை விகிதாச்சாரத்தின்படி பிரித்து இரண்டு தவணைகளில் விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநருக்கும், மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட தொகையை திட்டங்களின் முன்னுரிமை அடிப்படையில் கிராமப் பகுதிகள் மற்றும் நகரப் பகுதிகளுக்கு விடுவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**6.** ஒப்பந்தப்புள்ளி கோராமல் பணிகளை ஒப்படைப்பது தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998க்கு முரணானது என்பதால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் விதிமுறைகளை கடைபிடித்து, நமக்கு நாமே திட்டப்பணிகளை ஒப்படைக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி அரசின் பங்களிப்பு 50 விழுக்காடுக்கு மேல் உள்ள இனங்களில், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்றும், பணிகளின் மதிப்பு 50 விழுக்காடு மற்றும் அதற்கு குறைவான அளவில், அரசின் பங்களிப்பு உள்ள இனங்களில் பங்களிப்பாளர்கள் (Contributors) அப்பணியை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு தர வேண்டும் என்றும் பங்களிப்பாளர் பணியை நிறைவேற்றிட விரும்பாத இனங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி விதிமுறைகளை கடைபிடித்து பணிகளை நிறைவேற்றிட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது. இது குறித்து உரிய அரசு அறிவிக்கை (Notification) 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)–ன்கீழ் தனியே வெளியிடப்படும்.

**7.** முன்பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

> "**2515– 00 –** ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் **– 800 –** ஏனைய செலவு –பதினோறாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் **– II.** மாநிலத் திட்டம் **–** ஜே.டபிள்யூ **–** நமக்கு நாமே திட்டம் செயலாக்கம் **–09** உதவி மான்யங்கள் **–03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் (து.தொ.கு.எண்.**2515 00 800** ஜே.டபிள்யூ **0934**)"

**8.** இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீட்டுக் கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இருப்பார். கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**9.** இது ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்கானச் சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினம் எதிர்பாரா செலவு நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BGI) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் (BGI) துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இந்த செலவினத்தை 2007–2008 ஆம் ஆண்டிற்கான முதலாவது துணை மானியக் கோரிக்கையில் சேர்த்திட தக்க விளக்கக் குறிப்புடன் உரிய தருணத்தில் வரவு செலவுத் திட்டக் கருத்துக்களை அனுப்பி வைக்கும்படியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

**10.** இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.253 (DS(APA)/2007, நாள் 12.10.2007, கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.1091 (ஆயிரத்து தொண்ணூற்று ஒன்று) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்

**இணைப்பு**

**2007–2008 ஆம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்தப்படும் நமக்கு நாமே திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

1) நமக்கு நாமே திட்டம் நகரம் மற்றும் கிராமம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படும்.

2) இத்திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளை எடுத்துச் செய்யலாம்.

i) அரசு மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் (சுற்று சுவர் மற்றும் சுற்றுவேலி உள்பட), ஆய்வகங்கள், பள்ளிகளுக்கான கழிவறைகள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், துணை மையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள், நூலகங்கள், விடுதிகள், மதிய சத்துணவு கூடங்கள், அரசு நியாய விலை கடைகள், கிராமம் மற்றும் நகரங்களில் குடிநீர் ஆதாரங்கள் உருவாக்குதல் போன்ற சமுதாய சொத்துக்களை உருவாக்குதல், எல்லா சமூக சொத்துக்களையும் பராமரித்தல் (சுவர்களுக்கு சுண்ணாம்பு அடித்தல், பெயிண்ட் அடித்தல் போன்றவை உள்பட).

ii) பாலங்கள், அல்லது சிறிய பாலங்கள் கட்டுதல், சாலைகளை தரம் உயர்த்துதல், தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் சிலாப்பு அல்லது சிமெண்ட் கான்கிரிட் கொண்டு சீரமைத்தல்.

iii) பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு(Traffic Island), நீரூற்று, தெருவிளக்குகள் போன்றவற்றை அமைத்தல் மற்றும் அவற்றை மேம்படுத்தி பராமரித்தல்.

ஐ) பொது மக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற பள்ளிகள், நூலகங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு தேவையான அறைகலன்கள் (பர்னிச்சர்), கம்ப்யூட்டர்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல் பழைய கம்ப்யூட்டர்கள், உபகரணங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்கக்கூடாது. எனினும் நூலகங்களில் பயன்படுத்தப்பட்ட புத்தகங்களை தானமாக பெறலாம்.

மேற்கூரிய பணிகள், கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அ) சொத்தின் உரிமைதாரரின் முன் அனுமதி பெறாமல் எந்த நிரந்தர கட்டுமான பணியும் செய்யக்கூடாது.

ஆ) பணிக்கான பங்களிப்பை அளிக்க முன்வரும் நபர் / நிறுவனம் (contributing person / entity) சொத்திலோ அல்லது அதன் பயன்பாட்டிலோ (property / use of property) எந்த உரிமையும் கோரக் கூடாது.

இ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பணிகள் அனைத்தும் (தூர்வாரும் பணிகள் உட்பட), நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவும் தடை செய்யப்படுகிறது.

ஈ) பணிக்காக பங்களிப்பு நிதி வழங்கியவர்களின் பெயர்களை, மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற்று, பணி நடைபெறும் இடத்தில் விளம்பரப் பலகையாக வைக்கலாம். விளம்பரப் பலகையில் குறைந்தது மூன்றில் இரண்டு பகுதி பரப்பில் 'நமக்கு நாமே திட்டம்' என்பது தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். பணி செய்யும் இடத்தின் மதிப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையிலும், திட்ட பணிக்காக பங்களித்தோர் சொத்துக்கு உரிமையோ அல்லது குத்தகை உரிமையோ, கோர வாய்ப்பு அளிக்காத வகையில் அந்நிறுவனம் விளம்பரம் செய்ய அனுமதிக்கலாம்.

உ) திட்டப் பணிக்கு பங்களித்தோர் போதுமான அக்கறை காட்டவில்லை அல்லது ஏதாவது நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் கருதினால், பணியைச் செய்யவும், பராமரிக்கவும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும் அல்லது பணியை தொடர அனுமதிக்கப்படமாட்டாது.

**3. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள்.**

i) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்து செய்வதற்கான தேவை குறித்த கருத்து, தனி நபர், குழு, நிறுவனங்கள், கம்பெனிகள், கம்பெனிகள் அல்லது சமுதாய மக்கள் மூலமாக உருவாகலாம்.

ii) செய்ய வேண்டிய பணியை கண்டறிந்த பின், பணியின் தன்மையை குறிப்பிட்டு விண்ணப்பமும், மூன்றில் ஒரு பங்கு தொகையை கேட்புக் காசோலையாக வழங்கவும் சம்மதம் தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலரிடமோ கொடுக்க வேண்டும்.

iii) உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் அல்லது அரசுத் துறை நிறுவனங்கள் வழங்கும் நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

iv) மாவட்ட ஆட்சித் தலைவர், மேற்கொள்ளப்பட உள்ள பணியின் உண்மையான தேவை மற்றும்

செயல்படுத்தக்கூடிய வாய்ப்பு குறித்து கேட்டு அறிந்து கொள்வார்.

v) பணிகளை செய்வதற்கு உள்ளாட்சி மன்றம் அல்லது அப்பணி சம்பந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனின் அவற்றின் அனுமதியை, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

vi) உருவாக்கப்படும் சொத்துக்கள் உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க அந்த துறைகளின் ஒத்திசைவினை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

vii) குறிப்பிட்ட அளவுள்ள தொகைக்குள், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளைக் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

**4. பணிகளை நிறைவேற்றுதல்**

i) அரசின் உரிய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பொது பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட பணிகளுக்கான தற்போதைய விலைப்பட்டியலின்படி உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது சம்மந்தப்பட்ட துறையால் பணிகளின் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னரே, நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும். பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு தொகை கேட்புக் காசோலை மூலம் பணமாக மாவட்ட ஆட்சியரின் நமக்கு நாமே திட்டம் நிதி என்ற பெயரில் பெறப்பட வேண்டும். மீதமுள்ள தொகை, அரசு ஒதுக்கீடு செய்யும் நமக்கு நாமே திட்ட நிதியிலிருந்து அளிக்கப்படும். மேலும், மத்திய அல்லது மாநில அரசின் வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள், இத்திட்டத்திற்கு இசைவாக இருந்தால், அத்திட்டங்களின் நிதியும், பொது மக்களின் பங்களிப்புக்கு இணையாக சேர்த்துக் கொள்ளப்படும்.

ii) மக்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்கேற்க ஏதுவாக, பொது மக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவரோ, மேற்கண்ட பணியை தாங்களாகவே அல்லது வேறு முகவர்கள் மூலமாக செய்திட விரும்பினால், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும் போது எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த கோரிக்கையை ஆய்வு செய்து, பங்களித்தவரையோ அல்லது அதன் முகவரையோ, அப்பணியை அதற்கான மதிப்பீட்டின்படி செயல்படுத்த அனுமதி வழங்குவார்.

iii) பணிக்கான பொதுப்பங்களிப்பை அளித்தவர் / நிறுவனம் தானே பணியை நிறைவேற்ற முன்வரவில்லை என்றால், அப்பணிகள் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

iv) பணிகள் தொழில் நுட்ப அடிப்படையில் மேற்பார்வையிடுவதற்கான முகவர் யார் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்வார். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனமோ அல்லது இது தொடர்புடைய துறையோ, முகவராக இருக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் தேவைப்படும் நிதியை இம்முகமைக்கு விடுவிப்பார்.

v) அ) உள்ளாட்சி மன்றமோ/தொடர்பு துறையோ/ (Line Department) நிதிவழங்கியவரோ/ தனியார் நிறுவனங்களோ அல்லது மேற்கூறிய நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியை மேற்கொள்வோருக்கு பணி நிறைவேற்றல் ஆணை வழங்கப்படும்.

ஆ) பணிகளை நிறைவேற்றுவது தனியார் நிறுவனங்களோ/சங்கங்களோ/பொது மக்களாகவோ இருந்தாலும், இப்பணியை கண்காணிக்கும் முகவர்களான உள்ளாட்சி மன்றங்கள்/தொடர்புடைய துறையிடம் மட்டுமே இதற்கான நிதி இருக்கும்.

இ) பணி செய்யப்பட்ட அளவு குறித்து சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப பிரிவுகளால் சரிபார்க்கப்பட்டு, மற்ற அரசு திட்டங்களில் பணிச் செய்யப்பட்டதற்கு தொகை வழங்கப்படும் வழிமுறைகளின் படியே இத்திட்டத்தின் கீழும் பட்டியல்கள் அனுமதிக்கப்படும்.

ஈ) உயர்நிலை பள்ளி/மேல் நிலைப் பள்ளிகள் உள்ளிட்ட பள்ளிக் கூடங்களைப் பொறுத்தவரை மேற்கண்ட கண்காணிப்புத் தவிர, சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறை அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சிகள் ஆகியன கட்டிடத்திற்கான உறுதி தன்மை குறித்து சான்றிதழ் வழங்க வேண்டும். கட்டிடப் பணி நிறைவு பெற்றதற்கான பணிநிறைவு அறிக்கையை தொழில்நுட்பக் குழு தயார் செய்ய வேண்டும்.

vi) 100 விழுக்காடு மக்கள் பங்களிப்புடன் பணியை மேற்கொள்ளும் இனங்களில் சம்பந்தப்பட்ட பயனாளி சங்கம் / பங்களிப்பு அளித்தவர்கள் தாங்களே பணியை நிறைவேற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தால், நமக்கு நாமே திட்டத்தின்படி செலுத்த வேண்டிய முன்பண பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டி வலியுறுத்தாமல், பணியை நிறைவேற்ற அவர்களிடம் ஒப்படைக்கலாம். எனினும் மேற்கண்ட பணிகள், அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அமைப்பு மற்றும் கட்டிட உறுதி தன்மைகள் உட்பட வழக்கமான பணி நிறைவேற்றப்பெற்றதற்கான அளவுகள் சரிபார்க்கப்படுவதற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

**5. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை பராமரித்தல்.**

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பணிகளை / சொத்துக்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புக்கள் அல்லது சம்பந்தப்பட்ட துறை சார்பாக பணிக்கான பங்களிப்பை வழங்கியோரே பராமரித்து வருவது மிகவும் விரும்பத்தக்கது ஆகும். எனவே, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்தின் உதவியுடன் இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை தொடர்ந்து பராமரித்து வருவதற்காக சுயமாக நிதிபெற்று செயல்படும் ஒரு பயனாளிகள் குழுவை உள்ளூர் மக்கள் அமைக்க வேண்டும். உள்ளூர் தேவைக்கேற்ப திட்டமிட்டு, பணிகளை செயல்படுத்தி, பின்னர் பராமரித்து வருவதற்கு உள்ளூர் மக்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

**6. மாவட்டங்களுக்கு கூடுதல் நிதி மற்றும் சிறப்பு திட்டங்களுக்கான நிதி வழங்குதல்.**

i அ) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சிறப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாவட்டத்திற்கு கூடுதல் நிதி தேவைப்படின், அத்தகைய திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். கூடுதல் நிதி மற்றும் சிறப்பு திட்டங்களுக்கான நிதியை இயக்குநரிடம் கோருமுன், மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை முதலில் முழுமையாக செலவு செய்திருக்க வேண்டும்.

ஆ) ரூ.30 லட்சமும் அதற்கு மேலும் மதிப்பு உள்ள திட்டங்களுக்கு தேவைப்படும் நிதியை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரகத்தில் இவ்வகை திட்டங்களுக்காக வைக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து வழங்க, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு நிதி கோருவதற்கு, மாட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை முதலில் முழுமையாக அவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

இ) தேவைப்படின், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு செயலாளருடன் கலந்து ஆலோசித்து, பிப்ரவரி 28 ஆம் தேதி அன்று உள்ள நிலலரப்படி, மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் பணிகளுக்காக ஒதுக்கப்படாமல் உள்ள தொகையை, திட்ட செயல்பாடுகள் நன்றாக உள்ள மற்றும் திட்டங்களை செயல்படுத்த நிதி அதிகமாக தேவைப்படும் மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்து வழங்குவார்.

ii. அ) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் நிதி நமக்கு நாமே திட்டத்திற்கென துவங்கப்படும் வங்கி சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட வேண்டும்.

ஆ) மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்படும் எல்லா நன்கொடைகளும் ‘‘மாவட்ட ஆட்சித் தலைவரின் நமக்கு நாமே திட்டக் கணக்கு’’ என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேட்புக் காசோலையாக இருக்க வேண்டும். பெறப்பட்ட எல்லா நன்கொடைகளுக்கும் பற்றுச் சீட்டு வழங்க வேண்டும்.

இ) பணமாக பெறப்படும் நன்கொடைகளுக்கென தனியாக ஒரு பதிவேடு பராமரித்து வர வேண்டும். இந்த கணக்குகளையும், பதிவேட்டையும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் பராமரித்து வர வேண்டும்.

ஈ) நிர்வாக அனுமதி வழங்கும் போதே நன்கொடை தொகை உட்பட 75 விழுக்காடு தொகையை உள்ளாட்சி மற்றும் தொடர்புடைய துறைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் விடுவிக்க வேண்டும். மீதமுள்ள தொகையை பயன்பாட்டு சான்றிதழ் (Utilisation Certificate) பெற்ற பிறகு விடுவிக்க வேண்டும்.

iii. ஏதாவது காரணத்தால், உத்தேசிக்கப்பட்ட பணி மேற்கொள்ளப்படாமல் இருந்தால், பெறப்பட்ட நன்கொடையின் முழுதொகையையோ அல்லது ஒரு பகுதியையோ, நடை பெற்றுள்ள வேலை மற்றும் அதன் மதிப்புக்கு ஏற்ப, திருப்பி தர மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிடுவார். இது போன்ற நேர்வுகளில், பங்களிப்புத் தொகைக்கு வட்டி ஏதும் இன்றி தொகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, பங்களிப்பு வழங்கியவருக்குத் திருப்பி அளிக்கப்பட வேண்டும்.

**7. தகவல், கல்வி மற்றும் செய்தி தொடர்பு**

நமக்கு நாமே திட்டத்தின் சிறப்பு அம்சங்களையும் இத்திட்டத்தின் வெற்றிச் செயல்பாடுகள் குறித்தும் உள்ளூர் பத்திரிக்கை மற்றும் மின்னணு செய்தி சாதனங்கள் மூலம் வெளியிட தேவையான தகவல் ஒளிபரப்பு மற்றும் விளம்பரங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடு செய்திட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில், ஒரு விழுக்காட்டு தொகையை, தகவல் மற்றும் செய்தி சம்பந்தமான நடவடிக்கைகளுக்கும், இத்திட்டம் பற்றிய ஆவணங்கள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

**8. சென்னை மாநகராட்சி**

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பதிலாக, சென்னை மாநகராட்சி ஆணையர் நிறைவேற்றுவார். அதன்படி, இத்திட்டத்தின் கீழ் பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல்களை சென்னை மாநகராட்சி ஆணையர் வழங்குவார்.

**9.** நமக்கு நாமே திட்ட செயல்பாட்டிற்கான மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில், எதிர்காலத்தில் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களை கருத்தில் கொண்டு தேவையான மாற்றங்களை செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசுச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்